**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 22.07.2025

**அசல் வழக்கு எண்.140/2016**

**வா.சா.**2 – **துரைவேல், த/பெ.முருகப்பமுதலியார்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

திருவேகம்பன் தெருவில் நீங்கள் எத்தனை ஆண்டுகளாக வசிக்கிறீர்கள் என்றால் நான் பிறந்ததிலிருந்து அங்கு தான் இருக்கிறேன். ஐந்து தெருவுக்கு சம்பந்தமான சமுதாய மக்கள் வசிக்கும் இடம் சம்பந்தமாக பத்திரம் எழுதப்பட்டது அந்த பத்திரத்தில் நீங்கள் ஒரு தரப்பினராக இருந்து கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தினை அபிராமி என்பவருக்கு தந்தை இல்லை என்கிற காரணத்தினால் 1ம் பிரதிவாதியின் பெயரில் ஆவணம் எழுதப்பட்டதாக கூறுகிறீர்கள் அவ்வாறு அந்த தந்தை இல்லை என்கிற சங்கதி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. உங்களிடம் காட்டப்படுகின்ற பாதி தாக்கல் செய்த முதல் ஆவணம் அந்த ஆவணத்தின் படி தான் அபிராமிக்கு சொத்து எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். வாதி உங்களுக்கு வேண்டியவர் என்பதால் நீதிமன்றத்தில் வந்து பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை.

(இரண்டாம் பிரதிவாதியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என்று தெரிவித்தார் பதிவு செய்யப்பட்டது)

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.